தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, காளையார்கோவிலுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, புதிய வட்டங்களை உருவாக்குகின்றபோது, முதலிலே establishment என்று சொல்லக்கூடிய பணியாளர் நியமனம் தேவை என்ற அந்த அடிப்படையிலே, அதை நிறைவேற்றி வைத்துவிட்டு, அதற்குப்பிறகு உரிய இடத்தைத் தேர்வு செய்து, அதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, தேவையான நேரத்தில் உரிய கட்டடத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், இதுசம்பந்தமாக நீங்கள் கொடுத்ததை, உங்கள் கட்சி உறுப்பினர்கள் இன்று காலையில்தான் என்னிடத்தில் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடு) இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்று காலையில் கொடுத்ததை, இப்போதே எப்படி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை, நீங்கள் காலையில் கொடுத்துவிட்டு, இப்போதே எடுத்துக்கொள்ள என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று காலையில்தான் கொடுத்திருக்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான், நீங்கள் raise பண்ண முடியும். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அனுமதிக்காமல் நீங்கள் raise பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், நீங்கள் கூறுவது எதுவும், பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. அ. சவுந்தரராசன்: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக நீங்கள் காலையில்தான் என் அறையில் பேசினீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று காலையில்தான் அதுசம்பந்தமாகக் கொடுத்திருக்கின்றீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று காலையில்தான் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், இது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) அதெல்லாம் என் ஆய்வில் இருக்கிறது. பதில் வரும்பொழுது எடுத்துக்கொள்கிறேன், விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் யாராக இருந்தாலும்சரி, இன்றைக்குக் காலையிலேதான் அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நீங்கள் பேரவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் zero hour–லே ஏதாவது கேள்வி கேட்பதாக இருந்தால், அவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 செப்டம்பர் 21]

எழுந்து கேட்பதுதான் முறை. அதை விடுத்து, ஒட்டுமொத்தமாக எல்லோரும் எழுந்து, ஏதோ குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு, திட்டமிட்டுச் செய்கின்ற வேலையாக இது இருக்கின்றது. (குறுக்கீடுகள்) இருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. மைக் இல்லாமல் எதற்காக சத்தம் போடுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: திரு. துரைமுருகன், உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை, உட்காருங்கள். அதாவது, ஒரு பிரச்சினையை நீங்கள் எழுப்புகிறீர்களென்றால், (குறுக்கீடு) பொறுங்கள், ஏன் அவசரப்படுகிறீர்கள்? காலையிலே என்ன, சட்னியிலே மிளகாய் போட்டார்களா? அதிகமாகச் சாப்பிட்டு வந்துவிட்டீர்களா? காரம் அதிகமாக இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது கேள்வி எழுப்பினால், அதற்குரிய பதில் அரசிடமிருந்து பேரவைத் தலைவருக்கு வந்திருக்க வேண்டும். அரசிடமிருந்து பதில் வந்தால் எடுப்பார், வரவில்லையென்றால், இல்லையென்று சொல்வார். நீங்கள் கட்டாயம் எடுத்தே ஆக வேண்டுமென்று கட்டளையிட முடியாது. சட்டப் பேரவைத் தலைவருக்கு எந்தவொரு உறுப்பினரும் கட்டளையிட முடியாது.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதியில்லாமல் அவர் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: அரசிடமிருந்து உரிய பதில் வந்தால், அந்த கவன ஈர்ப்பை பேரவைத் தலைவர் உறுதியாக எடுப்பார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பேரவைத் தலைவரை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை நீங்கள் அப்படியெல்லாம் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். நான் அதற்கு பதில் சொல்லிவிட்டேன். அதனால் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன், உட்காருங்கள். ஏற்கெனவே கேள்வி நேரத்தில் நீங்கள் கேட்டபோதே நான் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். நீங்கள் எழுப்பிய அனைத்திற்கும் கேள்வி நேரத்தின்போது பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, Zero hour-ல் உங்களை raise பண்ண அனுமதிக்கிறேன் என்றுதான் சொன்னேன். நீங்கள் எழுப்பி அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, என் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். என்னுடைய ஆய்வில் இருக்கிற எந்தப் பொருளையும் உடனடியாக எடுக்க வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய ஆய்வில் இருக்கிற எந்தப் பொருளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த முடியாது. எனக்கு பதில் வர, வர நான் எடுத்துக்கொள்வேன். இன்றைக்குக்கூட, உங்கள் கட்சி உறுப்பினர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பை எடுத்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே, நீங்கள் வற்புறுத்த முடியாது. நீங்கள் கொடுத்தவற்றை, பதில் வர, வர எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் பண்ண முடியாது. அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. கவன ஈர்ப்பு

கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம், திரு. நு. நஞ்சப்பன், திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு)

(முற்பகல் 11-10

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, நீங்கள் தேவையில்லாததைப் பற்றியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் அதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். அந்த பதில் அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய பதில்தான் இறுதியானது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் மாற்றுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. (குறுக்கீடுகள்) அதைப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்தக் கவன ஈர்ப்பிலே நீங்கள் பேசுங்கள்.